செய்தி வெளியீடு எண். 189 நாள் : 06.04.2017

# திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், பொன்னேரி சார் ஆட்சியர் அலுவலகத்தில் மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் திரு.பா.பெஞ்சமின் அவர்கள் 741 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனை பட்டா மற்றும் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்,

~~~~~

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், பொன்னேரி சார் ஆட்சியர் அலுவலகத்தில் மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் திரு.பா.பெஞ்சமின் அவர்கள் 741 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனை பட்டா மற்றும் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்,

பொன்னேரி வட்டத்தை சேர்ந்த 125 நபர்களுக்கு இலவச வீட்டுமனை பட்டா, 49 நபர்களுக்கு திருமணத் உதவித்தொகை, 324 நபர்களுக்கு இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித் தொகை, இந்திராகாந்தி தேசிய உதவித்திட்டத்தின் கீழ் 141 நபர்களுக்கு முதியோர் உதவித்தொகை, 3 நபர்களுக்கு மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை, 92 நபர்களுக்கு விதவை உதவித்தொகை, 5 நபர்களுக்கு கணவரால் கைவிடப்பட்ட உதவித்தொகை, உழவர் பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் 2 நபர்களுக்கு முதியோர் உதவித்தொகை என மொத்தம் 741 நபர்களுக்கு ரூ. 95 இலட்சத்தி 34 ஆயிரத்திற்க்கான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் அவர்கள் கூறியதாவது “மாண்புமிகு மறைந்த முன்னாள் முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசு ஏழை-எளிய மக்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகிறது. அம்மா அவர்களின் வழியில் வந்த தற்போதைய அரசு நலனில் அக்கறைக்கொண்டு செயல்பட்டு வருகிறது. அவர்களின் வாழ்வாதாரம் பாதிப்புக்குள்ளாகாமல் இருக்க அனைத்து நடவடிக்கைகளையும் துரிதமாக மேற்கொண்டு வருகிறது. கடந்த 2011 தேர்தலின்போது கொடுக்கப்பட்ட அனைத்து வாக்குறுதிகளும் முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளது. அம்மாவின் அரசு 54 விதமான வாக்குறுதிகளை நிறைவேற்றியது. இதன் காரணமாக இரண்டாவது முறையாக மாண்புமிகு அம்மாவின் அரசு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆட்சி பொறுப்பேற்றார்கள். ஏழை-எளிய மக்களின் வாழ்க்கை தரம் உயர புதிய நலத்திட்டங்கள் வகுக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசு 2011 முதல் 2016 வரை 10,50,000 நபர்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை 12,57,645 நபர்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்கப்பட்டுள்ளது. இன்று பொன்னேரி வட்டத்திற்குட்பட்ட 741 நபர்களுக்கு கிட்டத்தட்ட ரூ. 95 இலட்சத்தி 34 ஆயிரத்திற்கான நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது. இதனை அனைத்து பயனாளிகளும் பெற்று பயன்பெற வேண்டும்” என்று கூறினார்.

மாவட்ட ஆட்சியர் அவர்கள் கூறியதாவது “தமிழக அரசு பல்வேறு நலதிட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இதில் குறிப்பாக உழவர் பாதுகாப்பு திட்டம் அனைத்து விவசாயிகளுக்கும் திருமண உதவிதொகை (ஆண்கள் மற்றும் பெண்கள் ரூ. 8 ஆயிரம்), கல்வி உதவிதொகை, இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவிதொகை மற்றும் விபத்து நிவாரண உதவிதொகை ஆகியவை வழங்கப்படுகிறது. இதனை அனைத்து விவசாயிகளும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டத்தின் மூலம் பெண்களுக்கு திருமணத் தொகையுடன் திருமாங்கல்யத்திற்கு தங்கம் வழங்கும் திட்டத்தினால் பெண் கல்வி ஊக்குவிக்கப்படுகிறது. அதுமட்டுமில்லாமல் பெற்றோர்களின் திருமண சுமையை குறைப்பதாக உள்ளது மாவட்டத்தில் 15,000 வீட்டுமனை பட்டாக்கள் வழங்க நிர்ணயம் செய்யப்பட்டு இதுவரை 1000 பட்டாக்கள் கூடுதலாக மாவட்டத்தில் வழங்கப்பட்டுள்ளது. பட்டா பெற்ற அனைவரும் வீடுகட்டி கொள்ள பிரதம மந்திரியின் ஆவாஜ் யோஜனா வட்டார வளர்ச்சி அலுவலரை அணுகி வீடு கட்டிகொள்ள வழிமுறைகளை தெரிந்து கொள்ளலாம்” என்று கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி,எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள், திருவள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.பி.வேணுகோபால் அவர்கள், பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.பலராமன், பொன்னேரி சார் ஆட்சியர் திரு.வே.ப.தண்டபாணி,இ.ஆ.ப., வட்டாட்சியர்கள் திரு.ஜவண்ணன், திரு.தமிழ்செல்வன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~